இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 166 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 13 – சனிக்கிழமை 27 ஜனவரி 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 166 : Thiruvalluvar Year - 2055 - Thai 13 - Saturday 27 January 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2024) சென்னை, செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் – அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மாதவரம் எஸ்.சுதர்சனம், மாநகராட்சி நிலை குழு தலைவர் நே. சிற்றரசு, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், என்.ஆர். இளங்கோ, கலாநிதி வீராசாமி, துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற சமநிலைச் சமுதாயத்தை அமைக்க

# மொழிப் போராளிகள் தியாகத்தின் மீது உறுதி ஏற்போம்!

## சென்னை - அண்ணாநகரில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜன.27–**

**“எல்லோருக்கும் எல்லாம் என்ற சமநிலை சமுதாயத்தை அமைக்க மொழிப் போராளிகள் தியாகத்தின் மீது உறுதி ஏற்போம்” என்று கழகத் தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா நகரில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

சென்னை செயிண்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் (25–01–2024) நடைபெற்ற ‘மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்’ பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

தாய்த் தமிழ்நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்துள்ள நகருக்கு வந்திருக்கிறேன்!

அண்ணா மறைந்தபோது தனது இரங்கல் கவிதையில் தலைவர் கலைஞர் அவர்கள் “விழி மலர்கள் வேலாகும் வாளாகும் தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்” என்று பாடினார்.

அப்படிப்பட்ட தமிழ்மொழிக்காகத் தங்களின் உயிரை ஈந்த மொழிப்போர் தியாகிகள் நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கிறேன்.

### இந்தித் திணிப்புக்கு எதிராக 12 வயதில் களம் கண்டவர்!

12 வயதில் தமிழ்க்கொடியோடு “ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே!” என்று இந்தித் திணிப்புக்கு எதிராகக் களம் கண்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவரது போராட்ட வரலாற்றை நான் விளக்கிச் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை!

அப்படிப்பட்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞருக்கு, மொழிப்போர் தியாகிகள் நாளான இன்று, திருச்சி தெற்கு மாவட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிலை உருவாக்கியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் நிறைவுற்ற பிறகு அவர் கட்டமைத்த தமிழ்நாடெங்கும் பல இடங்களில் அவருக்கு சிலை நிறுவியிருந்தாலும், மொழிப்போர் தியாகிகள் நாளான இன்றைக்கு அவர் இந்தியை எதிர்த்துப் போராடிய, கல்லக்குடி இருந்த மாவட்டத்தில் சிலை திறந்திருப்பது அவரது புகழுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருக்கிறது!

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியாம்” தமிழ் நிலத்தில் இந்தி மொழி ஆதிக்கத்தை நிறுவ முயன்றவர்களை எதிர்த்து ‘இருப்பது ஒரு உயிர், அது போகப் போவது ஒருமுறை, அது இந்த நாட்டுக்காக மொழிக்காக போகட்டுமே! என்று தமிழ் காக்க உயிரையும் விலையாய்க் கொடுத்த வீர மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள், இந்த நாள்!



### உலகில் எந்த மொழிக்கும் நடந்திராத போராட்டம்!

தமிழ்நாடு இதுவரையில் எத்தனையோ மொழிப்போர்க் களங்களைச் சந்தித்திருக்கிறது. எத்தனையோ மான மறவர்களை மொழிப் போர்க்களத்தில் இழந்திருக்கிறது. மொழிப் போர்க்களத்தில் அரசியல் தலைவர்கள் மட்டும் நிற்கவில்லை. தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரோடு தமிழறிஞர்களும் – சமயத் துறவிகளும் நின்றார்கள். உடம்பில் தமிழ் ரத்தம் ஓடும் அத்தனை பேரும் நின்றார்கள்! ஆண்களும், பெண்களும் சரிசமமாக நின்றார்கள்! பெண்கள் தனியாக வந்தார்களா? இல்லை கைக்குழந்தைகளை கூட அழைத்துக்கொண்டு வந்தார்கள்! உலகத்தில் எந்த மொழிக்காகவும் இப்படி ஒரு போராட்டம் நடந்திருக்காது. அப்படியொரு போராட்டம்தான் நமது மொழிப் போராட்டம்! “தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா” என்ற இறுமாப்போடு நான் நிற்கிறேன்!

### மொழிப்போர்த் தியாகிகள் தமிழ்த்தாயின் புதல்வர்கள்!

தமிழுக்காக உயிர் நீத்தவர்கள்தான் மொழிப்போர் தியாகிகள்! 1938–ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்தில் கைதாகி 1939–இல் மறைந்த நடராசனும், தாளமுத்துவும்; 1965–ஆம் ஆண்டு தூக்கி நின்ற துப்பாக்கிக் குண்டுக்கு மார்பு காட்டி நின்ற அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் படையில் சிவகங்கை இராசேந்திரனும்; 1965 மற்றும் 1966–ஆம் ஆண்டுகளில் தங்களின் தேக்குமரத் தேகத்தை தீயால் எரித்துக்கொண்ட கீழப்பழுவூர் சின்னச்சாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, ‘மாணவமணி’ மயிலாடுதுறை சாரங்கபாணி போன்றோரும் அமுது அருந்துவது போல் நஞ்சருந்தி உயிரிழந்த கோவை பீளமேடு தண்டபாணி,

> **“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியாம் தமிழ்நிலத்தில் இந்தி மொழி ஆதிக்கத்தை நிறுவ முயன்றவர்களை எதிர்த்து ‘இருப்பது ஒரு உயிர், அது போகப் போவது ஒரு முறை, அது இந்த நாட்டுக்காக மொழிக்காக போகட்டுமே! என்று தமிழ் காக்க உயிரையும் விலையாய்க் கொடுத்த வீர மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள், இந்த நாள்!”**

கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம் போன்றோரும் இன்றைக்கும் படங்களாக இருந்து உணர்வுகளில் நிறைந்து நம்மை வழிநடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தத் தியாகிகள் எல்லோருக்கும் என்னுடைய வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன். இவர்கள்தான் தமிழ்த்தாயின் புதல்வர்கள்!

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்